போது சொத்தின் பேரில்தான் கடன் வழங்கப்படும் என்று அமைச்சரவர்கள் கூறுகிறார்கள். தஞ்சை மாவட்டத்தில் ஏறத்தாழ 80 சதவீதம் குத்தகை நிலங்கள்தான். அப்படியானால் சொந்த நிலம் இல்லாத விவசாயிகளுக்கு எப்படி கடன் வழங்க முடியும். ஆகவே, அரசு இதை மீண்டும் பரிசீலனை செய்து, முன்பு இருந்ததைப் போல சாகுபடி செய்கின்ற பயிர் மதிப்பீட்டின் பேரில் கடன் வழங்க ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியிருக்கிற வினா அடிப்படையில்லாதது. காரணம் நபர் ஜாமீனில் கடன் வழங்குவதும் தொடரும், சொத்தின் மீது கடன் வழங்குவதும் தொடரும். அதே நேரத்தில் சொத்தின் மீது கடன் வழங்குகிற போது இப்போது இருக்கின்ற நடைமுறைகள் எளிதாக்கப்பட்டு, சுலபமாகக் கடன் வழங்கும் நிலை இருக்கிறது.

**நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும் காசுக் கடன்களுக்கான வட்டி விதம்.**

*வினா எண். 290—திரு. இர. கருப்பையா: மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்படும் காசுக் கடன்களின் வட்டியை 12—7—1981 ஆம் தேதியிலிருந்து 7.5 சதமாக உயர்த்தி மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கிகள் 1982 ஜனவரி முதல் வாரத்தில் அறிவித்துள்ளனவா?

(ஆ) உயர்த்திய வட்டி விகிதத்தை அறிவிப்பு வெளியிட்ட தேதியிலிருந்து அமுல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** (அ) ஆம்.

(ஆ) இல்லை.

**திரு. இரா. கருப்பையா:** தலைவரவர்களே, சமுதாயத்தின் நலிந்த நிலையில் உள்ள ஏழை நெசவாளர்களைப் பாதுகாக்க வேண்டுமென்ற எண்ணத்தில்தான் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்த நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும் கடனுக்கான வட்டியில் 3 சதவீதத்தை தற்போது அரசு ஈடு செய்கின்றது என்பது உண்மையா? அப்படி என்றால் இந்தச் சங்கங்களுக்கு இந்த வட்டி உயர்வைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

*1982 மார்ச் 1]*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவரவர்களே, இந்த முடிவை மேற்கொண்டது மாநில அரசு அல்ல. நெசவாளர்களுக்கு குறைந்த வட்டியில் கடன் வழங்க வேண்டும் என்பதில் இந்த அரசு அக்கறை கொண்டிருக்கிறது. மேலும் இந்த நலிந்த பிரிவினருக்கு குறைந்த வட்டியில் கடன் வழங்க வேண்டியவர்கள் மத்திய அரசும் ரிசர்வ் வங்கியும் தான். அவர்களே இது பற்றி பரிசீலனை செய்து ஒரு சதவீதம் உயர்வை மத்திய அரசு அனுமதியின் பேரில் ரிசர்வ் வங்கி விதித்திருக்கிறது. இது நலிந்த நிலையில் இருக்கின்ற நெசவாளர்களைப் பாதிக்கும் என்பதை இந்த அரசு உணருகிறது. இருந்தாலும் ரிசர்வ் வங்கியின் உத்தரவை நாம் நிறைவேற்ற வேண்டியிருப்பதால் இதை நம்மால் தவிர்க்க முடியாது. வேண்டுமானால் மாநில அரசு இந்த உயர்வைக் குறைக்க மத்திய அரசுக்கும் ரிசர்வ் வங்கிக்கும் எழுதும்.

**திரு. இரா. கருப்பையா:** தலைவரவர்களே, இந்த நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்திச் செய்யக் கூடிய துணிகளை, சரக்குகளை மாநில கூட்டுறவுச் சம்மேளனம் (கோ-ஆப்டெக்ஸ்) அடக்க விலையில் 9 சதவிகிதம் சேர்த்துதான் கொள்முதல் செய்கிறது. இப்போது வட்டி $10\frac{1}{2}$ சதவீதமாக உயர்ந்திருக்கிறது. அதிலும் குறிப்பாக ஏற்கெனவே விற்ற சரக்குகளுக்கு எல்லாம் ஜூலை மாதம் 12-ந் தேதியிலிருந்து இந்த வட்டியை ஈடு செய்ய வேண்டியிருக்கிறது; முன் தேதியிட்டு வட்டியை வசூல் செய்கிறார்கள். ஆகையால் இந்தச் சங்கங்களுக்கு இதனால் ஏற்படும் இழப்பை ஈடு செய்ய மாநில அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவரவர்களே, $10\frac{1}{2}$ சதவீதம் என்ற உயர்வு இருந்தபோதிலும் ''சப்சிடி'' இருக்கிற காரணத்தால் $6\frac{1}{2}$ சதவீதத்திலிருந்து $7\frac{1}{2}$ சதவீதத்திற்குதான் உயர்வு செய்யப்பட்டிருக்கிறது. ரிசர்வ் வங்கி அந்தத் தேதியில் இருந்து வட்டி உயர்வுக்கு வகை செய்து, உத்தரவு பிறப்பித்து இருப்பதால் அந்த உத்தரவை மீறுகிற அதிகாரம் நமக்கு இல்லை. அதனால் அது அந்தத் தேதியிலிருந்து நடைமுறைக்கு வந்திருக்கிறது.

**ஸ்ரீபெரும்புதூர் தொகுதிக்கான பாலாற்றுக் குடிநீர் திட்டம்.**

*வினா எண் 291—திருமதி டி. யசோதா: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாலாற்று குடிநீர் திட்டம் மூலம் ஸ்ரீபெரும்புதூர் தொகுதி பகுதிகளுக்கு எப்போது தண்ணீர் அளிக்கப்படும்?

(ஆ) காலதாமதத்திற்கு காரணம் என்ன?